www.tamilarangam.net

மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே

வணக்கம்

முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் ஐந்து வருடங்களாகியும், மூன்று நீதிபதிகள் மாறிவிட்ட போதும் எனக்குரிய நீதியைப் பெறுவதற்குரிய வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சூழ்நிலையில், எனக்கு இழைக்கப்பட்ட சட்டவிரோத, அராஜக, கொடுமைகளை இந்த மன்றத்தில் தெரிவிப்பதற்காவது எனக்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு என் நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நான் இலங்கை நாட்டின் ஒரு கௌரவமான பிரஜை. இலங்கையில் என்மீது எந்த ஒரு வழக்கும் கிடையாது. இங்கும் கூட இந்த வழக்கைத் தவிர வேறு எந்த வழக்கும் என்மீது கிடையாது. என்மீது போடப்பட்டிருக்கும் இவ்வழக்கு ஒரு பொய் வழக்காகும். இவ்வழக்கில் என்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் யாவற்றையும் நான் மறுக்கிறேன். ஒரு பொய்யை திரும்பத்திரும்ப சொல்வதன் மூலமும், பொய்ச்சாட்சிகளைத் தயார்படுத்தியும் என்மீது சுமத்திய குற்றச்சாட்டுகளை உண்மையென நீருபிக்க, காவல் துறையினர் முனைவது எனக்கு ஆச்சரியத்தினைக் கொடுக்கவில்லை. ஏனெனில் இக்காவல் துறையினர் பொய்வழக்குப் போடுவது பற்றி இராமநாதபுரம் முதன்மை நீதிமன்ற நீதிபதி அவர்களே கண்டித்து கருத்துத் தெரிவித்து இருக்கிறார். பாண்டியம்மாள் கொலைவழக்குத் தொடர்பாக அந்நீதிபதி வழங்கிய தீர்ப்பிலிருந்து சிலவரிகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ”போலீஸ் சித்திரவதைக்குப் பயந்து செய்யாத குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கொள்ளவைக்கின்ற சூழ்நிலை இருப்பதாகத் தெரிகிறது. திறமையான போலிஸ் அதிகாரி ஒருவர் சொல்லிக் கொடுத்து நீதிமன்றம் நம்புகின்ற அளவுக்குச் சாட்சியங்கள் பேசினால், அதை நம்பிச் செயல்பட வேண்டியிருக்கிறது. ஆக ஒருவர் தண்டிக்கப்படுவதும், விடுதலை செய்யப்படுவதும், ஒரு அதிகாரியைச் சார்ந்தே இருக்கிறது என்பது தான் நிலைமை ஆகவே இந்த வழக்கை ஒரு முன் மாதிரியாகக் கொண்டு, நாட்டுநலனில் அக்கறையுள்ளவர்கள், சமுதாய மாற்றம் விரும்புகிறவர்கள், சான்றோர்கள் இதற்கு ஒரு பரிகாரம் தேடவேண்டும்.” என்று அந்நீதிபதி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். நீதிபதி ஒருவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்த பின்பும்கூட போலிஸ் அதிகாரிகள் பொய்வழக்குப் போடும் சூழ்நிலை மாற்றம் பெறவில்லை என்பதும் பொய்வழக்குப் போடுவது தொடருகின்றது என்பதற்கும் இந்த வழக்கும் அதில் என் நிலையும் இன்னொரு சிறந்த உதாரணமாகும்.

கனடா நாட்டில் குடியுரிமை பெற்று வசித்துவரும் எனது சகோதரருடன் சென்று தங்குவதற்காக, அங்கு செல்வதற்குரிய பயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக நான் இந்தியா வந்தேன். சட்ட ரீதியாகவே நான் இங்கு வந்தேன். ஆனால் இங்கு எனக்கு சட்டத்தின் பாதுகாப்புக் கிடைக்காதது மட்டுமல்ல சட்டவிரோதமாக கொடுமைப்படுத்தப்பட்டும் வருகிறேன். எனது கடவுச்சீட்டுக்கு இந்திய அரசு வழங்கிய விசா அனுமதியோடு விமானமூலம் 24.04.1990 அன்று சென்னை

விமானநிலையம் வந்தேன். அதன்பின் சென்னையில் வளசரவாக்கம் என்னுமிடத்தில் என் உறவினர் ஒருவருடன் தங்கியிருந்தேன். அப்போது தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத்தமிழர்கள் அருகிலுள்ள காவல் நிலையத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க நானும் வளசரவாக்கம் காவல்நிலையத்தில் பதிவு செய்து கொண்டேன். நான் இங்குவந்த நோக்கத்தின்படி கனடா நாட்டிற்குச் செல்வதற்குரிய பயண ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த வேளையில் 12.03.1991 அன்று இரவு இரண்டுமணியளவில் நான் தங்கியிருந்த வீட்டிலிருந்து கியூ பிரிவு(Q) போலீசார் என்னைப்பிடித்துச் சென்றனர். உதவிக்கண்காணிப்பாளர், இராமையா தலைமையில் வந்த கியூ பிரிவு(Q) போலீசார் என்னைப்பிடித்துச் சென்று மந்தைவெளியிலுள்ள கியூ பிரிவு அலுவலகத்தில் வைத்தனர். அதன்பின் அங்கு மத்திய உளவுப்படையினைச் சேர்ந்த ஐ.பி(IB)அதிகாரிகளினால் தமது சதித்திட்டத்திற்கு ஒத்துழைக்கும்படி மிரட்டப்பட்டேன். கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையிலான தி.மு.க அரசு மத்திய அரசினால் ”டிஸ்மிஸ்” செய்யப்பட்டதால் மக்கள் மத்தியில் அக்கட்சிக்கு உருவான அனுதாப ஆதரவை உடைக்கும் வண்ணம், தி.மு.க கட்சியை ஒரு வன்முறைக் கட்சியென்று மக்கள் மத்தியில் காட்டுவதற்கு, மத்திய உளவுப்படையானது சதித்திட்டம் தீட்டியிருந்தது. இச்சதித்திட்டத்திற்கு ஒத்துழைக்கும்படி என்னை மிரட்டியது. நான் இதற்கு இணங்க மறுத்தேன். இதனால் கோபமடைந்த மத்திய மாநில உளவுப் படையினர், அவர்கள் குறிப்பிட்டது போன்றே என்மீது பொய் வழக்குப் போட்டதோடு இத்தனை வருடங்களாக அடைத்துவைத்து கொடுமைப்படுத்தி வருகின்றனர். அவர்களின் சதித்திட்டத்திற்கிணங்க மறுத்தமையினாலேதான் நான் பழிவாங்கப்படுகிறேன்.

உளவுப் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல் நான் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அறிந்த திலீபன் மன்றத் தலைவர் தியாகு என்பவர் உயர்நீதிமன்றத்தில் இது தொடர்பாக ஆட்கொணர்வு மனு ஒன்றை தாக்கல் செய்தார். இதனால் தொடர்ந்தும் சட்ட விரோதமாக வைத்திருக்கமுடியாமல் 16.03.91 அன்று நிலக்கோட்டை நீதிபதி முன் என்னை ஆஜர் செய்தனர். பின் அந்நீதிபதியின் உத்தரவுப்படி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டேன். இங்கே எனது கைது பற்றி சில விடயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ” ஒரு நபரைக் கைது செய்யும்போது கைது பற்றி அந்நபருக்கு தெரியப்படுத்த வேண்டும்.
கைது செய்யப்படும் நபர் விரும்பினால் தன்னுடன் ஒரு நண்பரையும் அழைத்துக் கொண்டு கைது செய்யவந்த அதிகாரியுடன் காவல் நிலையம் செல்லலாம். கைது செய்யப்பட்டவர் விரும்பும் நபருக்கு அவர் கைது பற்றிய தகவலை உடனே தாமதமின்றி கைது செய்யும் அதிகாரி அறிவிக்கவேண்டும். இவ்வாறு அறிவித்த முழுவிபரங்களை தமது டயறியில் எழுதியிருக்கவேண்டும்” என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. இவற்றைக் கடைப்பிடிக்காத அதிகாரிகள், நீதிபதிகள் யாவரும் கோர்ட் அவமதிப்புக் குற்றவாளிகளே என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. இவ்வாறு உச்சநீதிமன்றம் வலியுறுத்தியும் இவையாவுமே என் விடயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை. நான் கைது செய்யப்படும்போது ஏன் கைது செய்யப்படுகிறேன் என்று

தெரிவிக்கப்படவில்லை. என்னுடன் என் உறவினர் வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதன்பின் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து என் வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ளவும் அனுமதிக்கபபடவில்லை. என் உறவினருக்கோ அல்லது என் வழக்கறிஞருக்கோ நான் எங்கு வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதையோ அல்லது என்மீது என்ன வழக்கு போடப்பட்டுள்ளது என்பதையோ, நான் மதுரை கொண்டு செல்லப்பட்டு அங்கு மத்திய சிறையில் அடைக்கப்பட்ட விபரத்தையோ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. இது குறித்த என் முறையீடுகளை ரிமாண்ட் செய்த நீதிபதி அவர்கள் கேட்காததுடன் இது தொடர்பாக எழுத்துமூலம் நான் மனுக்கொடுப்பதற்கும் அனுமதி மறுத்துவிட்டார். இதன்மூலம் போலீசாரின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு நீதிபதியும் துணை போவதை நான் அறிந்து கொண்டேன்.

நான் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட பின்பே என்மீது கொடைக்கானல் டி.வி.டவர் வெடிகுண்டு வழக்கு, மற்றும் சென்னை நேருசிலை வெடிகுண்டு வழக்கு போடப்பட்டிருப்பதாக அறிந்தேன். இதில் ஆச்சரியம் என்னவெனில் சென்னை நேருசிலை வெடிகுண்டு வழக்கிலும் என்னை இணைத்திருப்பதால் சென்னையில் நீதிபதி முன் ஆஜர் செய்து சென்னை மத்திய சிறையிலேயே அடைத்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் மதுரை கொண்டுவந்து மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். நான், என் வழக்கறிஞர் மற்றும் உறவினர்கள் நண்பர்களிடமிருந்து உதவிகள் பெறுவதை தடுப்பதற்காகவே இவ்வாறு செய்தனர். இவ்வாறு தடுத்து நீண்டகாலம் சிறையில் என்னை வைத்திருக்கவேண்டும் என்பதே அவர்கள் நோக்கமாகும். இங்கு நான் கேட்க விரும்புவது என்னவெனில், இவர்கள் 88ம் ஆண்டு இவ்வெடிகுண்டு சம்பவம் நடந்ததாகக் குறிப்பிடுகின்றனர். அப்போதே இச்சம்பவத்தில் தொடர்புள்ளவர்களை கைது செய்ததாகவும் குறிப்பிடுகின்றனர். எனவே அந்த விசாரணையில் நானும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக இவர்கள் குறிப்பிடுவது உண்மையெனில் என்னை கைது செய்வதற்கு இவர்கள் ஏன் முயற்சி செய்யவில்லை? அப்போது அமைதிப்படை என்னும் பெயரில் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தது. எனவே இவர்கள் விரும்பியிருந்தால் இலங்கையிலேயே என்னைக் கைது செய்திருக்க முடியும்? ஏன் அவ்வாறு செய்யவில்லை? அல்லது நீதிமன்றம் மூலம் சரணடையும்படியான உத்தரவை பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கலாம். ஏன் அப்படிச் செய்யவில்லை? இல்லையேல் நான் இங்கு வருவதற்கு விசா தரும்போது கைது செய்திருக்கலாம், அல்லது சென்னை விமானநிலையம் வந்திறங்கியபோதே கைது செய்திருக்கலாம். அல்லது வளசரவாக்கம் காவல் நிலையத்தில் பதிவு செய்தபோதே கைது செய்திருக்கலாம். ஏன் அவ்வேளைகளில் நான் கைது செய்யப்படவில்லை? இவ்வாறு செய்யாமல் கலைஞர் அரசு ”டிஸ்மிஸ்” செய்யப்பட்ட பின்பு கைது செய்யப்பட்டதிலிருந்தே நான் உண்மையில் இந்த வழக்கிற்காக கைது செய்யப்படவில்லை என்பதும், உளவுப்படையின் சதித்திட்டத்திற்கிணங்க மறுத்தமையால் பழிவாங்கவேண்டும் என்பதற்காகவே இவ்வழக்கு என்மீது போடப்பட்டிருப்பதும் தங்களால் புரிந்துகொள்ள முடியுமென்று நம்புகிறேன்.

மதுரை மத்திய சிறையில் விசாரணைச் சிறைவாசிகளை அடைக்கும் பகுதியில் ஈழத்தமிழ்ச் சிறைவாசிகளுக்கென ஒரு பகுதி பிரித்து வைத்திருக்கின்றனர். அப்பிரிவில் என்னை சக ஈழத்தழிழர்களுடன் அடைக்காமல் சிறைச்சாலையின் பின்புறத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ”மெண்டல் செல்” என்னும் பகுதியில் கொண்டுசென்று அடைத்தனர். இச்செல் பகுதியில் பைத்தியக்காரச் சிறைவாசிகள், கொடியதொற்று நோய் கொண்ட சிறைவாசிகள், மரண தண்டனை பெற்ற சிறைவாசிகள் என்போரையே அடைப்பது வழக்கம். சாதாரண விசாரணைச் சிறைவாசியான என்னை, சக விசாரனைச் சிறைவாசிகளுடன் சேர்த்து அடைக்காமல் இவ்வாறு ”மெண்டல் செல்” பகுதியில் கொண்டு சென்று அடைத்ததன் நோக்கம், என்னைத் தனிமைப்படுத்தி உடல்,உளரீதியாக என்னைப்பாதிப்படையச் செய்யவேண்டுமென்பதே! என்னை அடைத்து வைக்கப்பட்ட ஒரிரு நாட்களில் என்னருகில் வைக்கப்பட்டிருந்த குருசாமி என்பவர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார். அதிகாரிகளின் கொடுமையைச் சகிக்கமுடியாத மாணிக்கம் என்ற சிறைவாசி மரத்திலிருந்து விழுந்து தற்கொலை செய்துகொண்டார். இவ்வாறான சம்பவங்கள் எனக்கு ஆச்சரியத்தையும், மனவேதனையும் கொடுத்தன. மேலும் சுகாதார வசதிகளோ, நோய்த்தடுப்பு முறைகளோ, பொழுதுபோக்கு வசதிகளோ எதுவும் செய்துதரப்படாமல் தனிமைச் செல்லில் வைக்கப்படடேன். இவ்வாறு என்னை வைக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு சாதாரண விசாரனைச் சிறைவாசிகளுடன் என்னை அடைக்க வேண்டுமெனக்கோரி சிறைக் கண்காணிப்பாளர், மற்றும் கொடைக்கானல் நீதிமன்ற நீதிபதி ஆகியோரிடம் முறையிட்டேன். ஆனால் இதுகுறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது குறித்து நான் செய்த இம்முறையீட்டினால் எவ்விதப்பயனும் ஏற்படவில்லை.

இந்நிலையில் 7.5.91 அன்று என்னை தேசீய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. தேசீய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டதால், தேசீய பாதுகாப்புச் சட்டவிதிப்படி இக்காவலில் வைப்பதற்குரிய காரணங்களை தெரிவிக்கும் ஆவணங்கள் தரப்பட்டன. அதில் இவ்வழக்கையும், அத்துடன் மேலும் நான் வெடிகுண்டுகளை வைக்கத்திட்டமிட்டதாகவும் குற்றப்புலனாய்வு ஆய்வாளரால் கூறப்பட்டிருந்தது. அதில், 15.3.91 அன்று மாலை 5 மணியளவில் சென்னை தியாகராய நகர் பஸ் நிலையத்தில் ”பொழிலன்“ என்பவருடன் சேர்ந்து வெடிகுண்டு வைக்கச் சதித்திட்டம் தீட்டியபோது என்னைக் கைது செய்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் ஆச்சரியம் என்னவெனில் நான் 12.3.91 அன்றே கைது செய்யப்பட்டுவிட்டநிலையில் 15.3.91 அன்று எப்படி நான் சதித்திட்டம் தீட்ட முடியும்? அதுமட்டுமல்ல இவர்கள் குறிப்பிடுவது போன்று யாராவது பஸ் நிலையத்தில் அதுவும் மக்கள் மத்தியில் பகிரங்கமாக திட்டம் போடுவார்களா? மேலும் இவ்வாறு இவர்கள் கூறுவது உண்மையெனில், அந்நேரம் என்னுடன் சேர்ந்து சதித்திட்டம் தீட்டியதாகக் கூறப்படும் ”பொழிலன்” என்பவரை ஏன் கைது செய்யவில்லை? நான் சதித்திட்டம் தீட்டியது உண்மையெனில் அதற்குரிய சாட்சியங்கள் ஆதாரத்துடன் இருப்பதாகக் கூறிக்கொள்ளும்

போலீசார் இதற்கு ஏன் என்மீது வழக்குப் போடவில்லை. இதிலிருந்தே, ஜாமீனில் நான் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்து சிறையில் வைக்கப்படவேண்டும் என்பதற்காக போடப்பட்ட தேசீய பாதுகாப்புச் சட்டக்காவலை நியாயப்படுத்துவதற்காக கூறப்பட்ட காரணங்களே இவை என்பதும், இவர்கள் குறிப்பிடும் சம்பவங்கள் பொய்யானவை, உண்மையிலே அவ்வாறு நடக்கவில்லை என்பதையும் நன்கு புரிந்துகொள்ளமுடியும். கற்பனையான காரணங்களை ஜோடித்து அதன்மூலம் தேசீய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அடைத்து கொடுமைப்படுத்தப்பட்டுள்ளேன் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

நான் 20.6.91 அன்று தேசீய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டவர்களை பரிசீலிக்கும் ஆய்வுக் கமிட்டி முன் ஆஜர் செய்யப்பட்டேன். அப்போது அவ்ஆய்வுக்கமிட்டி நீதிபதிகள் முன்னிலையில் நான் எந்த சூழ்நிலையில் கைது செய்யப்பட்டேன், ஏன் என்மீது பொய்வழக்குப் போடப்பட்டது என்பதையும் மற்றும் தேசீய பாதுகாபபுச் சட்டத்தின் கீழ் அடைப்பதற்கு கூறப்பட்டிருக்கும் காரணங்கள் யாவும் பொய்யானவை, எவ்வித ஆதாரமும் அற்றவை என்பதையும் விளக்கினேன். எனது விளக்கத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், ”தவறான முறையில் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை தங்களால் உணரமுடிகின்றதென்றும், ஆனால் என்னை விடுதலை செய்யக்கூடாது என்று மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருப்பதால் தங்களால் எதுவும் செய்யமுடியாமல் இருப்பதாகவும்” கூறினார்கள். இதனால் நான் வேறு வழியின்றி உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக “ரிட்” மனுத்தாக்கல் செய்தேன். எனது இம்மனு விரைந்து விசாரனைக்கு எடுத்துக் கொள்வதற்கு ஒத்துழைக்காமல் வேண்டுமென்றே அரசு தரப்பில் தாமதம் செய்யப்பட்டது. இறுதியாக எனது தேசீய பாதுகாப்புச் சட்டக் காவல் முடியும் இறுதிக் காலத்தில் 22.2.92 அன்று எனது ரிட் மனு தள்ளுபடி செய்வதாகத் தீர்ப்புக் கூறப்பட்டது.

என்மீது போடப்பட்ட தேசீய பாதுகாப்புச் சட்டக்காவல் முடிவு பெற்றதும் என்மீதான வழக்கிற்கு ஜாமீன் பெற முயற்சி செய்தேன். அவ்வேளையில் (26.6.92) அன்று என்னை வேலூர் கோட்டையிலுள்ள சிறப்பு முகாமில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இச்சிறப்பு முகாம் உத்தரவு அரசு ஆணை எண் எஸ்.ஆர். 111-1219-4-92 ) இந்நிலையில் 21.7.92 அன்று உயர்நீதிமன்றம் எனக்கு நிபந்தனையுடன் கூடிய ஜாமீனில் விடுதலையளித்தது. மதுரைக் குற்றப்புலனாய்வுப் போலீஸ் உதவிக் கண்காணிப்பாளர் முன்னிலையில் வாரம் ஒரு தடவை காலை 10 மணிக்கு கையெழுத்துப் போடவேண்டும என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்தது. ஆனால் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி நான் விடுதலை செய்யப்படாமல் 30.7.92 அன்று வேலூர் கோட்டை சிறப்பு முகாமிற்கு கொண்டு சென்று காவலில் வைக்கப்பட்டேன். உயர்நீதிமன்ற உத்தரவுப்படி என்னை விடுதலை செய்யாமல் சிறப்பு முகாமில் கொண்டு சென்று அடைத்ததால் இதனை எதிர்த்து கோர்ட் அவமதிப்பு வழக்கு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். (கோர்ட் அவமதிப்பு வழக்கு இலக்கம் on appl.No-433/92) தனது உத்தரவை அமுல்படுத்தாத அதிகாரிகளைத் தண்டித்து, தன்

உத்தரவுப்படி என்னை விடுதலை செய்வதற்குரிய உத்தரவுகளை மீண்டும் பிறப்பிப்பதற்கு மாறாக உயர்நீதிமன்றம் என் வழக்கை தள்ளுபடி செய்தது. இத்தீர்ப்பு எனக்கு ஆச்சரியம் கொடுத்தது. ஏனெனில் cc no 5/92 (பத்மநாபா கொலைவழக்கு) வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட ஜெயபாலசிங்கம் என்ற இலங்கைத் தழிழருக்கு போடப்பட்ட சிறப்பு முகாம் உத்தரவு இதே உயர்நீதிமன்றத்தினால் ரத்துச் செய்யப்பட்டது. (HCP No.151/94) இதேபோல் ஈசன் என்ற இலங்கைத் தழிழர் மீது போடப்பட்ட சிறப்பு முகாம் உத்தரவு உயர்நீதிமன்றத்தினால் ரத்துச் செய்யப்பட்டது(HCP No.89/94).இதேபோல் இன்னும் சில இலங்கைத் தழிழர்களுக்கும் போடப்பட்ட சிறப்புமுகாம் உத்தரவுகளை இவ்வுயர் நீதிமன்றம் ரத்துச் செய்தது. ரத்துச்செய்து வழங்கப்பட்ட தீர்ப்பில் “ சிறையில் நீதிமன்றக் காவலில் இருக்கும் போது சிறப்பு முகாம் தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிப்பது தவறு” என்று தெரிவிக்கப்பட்டது. எனக்கும் நீதிமன்றக் காவலில் சிறையில் நான் இருக்கும்போதே சிறப்பு முகாம் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட படியால் இதே காரணத்தின் அடிப்படையில் என்மீது போடப்பட்ட சிறப்புமுகாம் உத்தரவை உயர்நீதிமன்றம் ரத்துச் செய்திருக்கவேண்டும். அதுமட்டுமல்ல அரசினால் இச்சிறப்புமுகாம் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பே, இது பற்றிய அரசு தரப்பு விவாதங்களை கேட்டறிந்த பின்பே, உயர்நீதிமன்றம் எனக்கு நிபந்தனையுடன் கூடிய ஜாமீன் விடுதலை செய்தது என்பதால் நீதிமன்ற உத்தரவே உயர்ந்தது என்ற அடிப்படையில் என்னை ஜாமீனில் விடுதலை செய்யப்படவேண்டுமென்பதை உயர்நீதிமன்றம் வலியுறுத்தியிருக்க வேண்டும். ஆனால் உயர்நீதிமன்றம் இதற்குமாறான ஒரு தீர்ப்பை வழங்கியது ஏதோ உள்நோக்கம் கொண்டதாகவே எனக்குப்பட்டது.

வேலூர்க் கோட்டையில் திப்பு மகாலில் அமைந்துள்ள சிறப்பு முகாமில் நான் வைக்கப்பட்டிருந்த வேளையில் மனிதாபிமானமற்ற முறையில், அடிப்படை வசதிகள் மற்றும் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் மிகவும் கொடுரமாக நடத்தப்பட்டேன். சிறப்பு முகாம் என்னும் பேரில் சிறையை விடக்கொடிய சித்திரவதை முகாமாகவே இச்சிறப்பு முகாம் இயக்கப்படுகின்றது. இச்சிறப்பு முகாமில் நான் வைக்கப்பட்டிருந்தவேளையயில் என்மீது போடப்பட்ட வழக்கின் வாய்தாக்களுக்கு நீதிமன்றத்தில் ஒழுங்காக என்னை ஆஜர் செய்யப்படுவதில்லை. காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு நபரை தகுந்த காரணம் இன்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் இருப்பது சட்டவிரோதமெனக் கூறப்படுகின்றது. எனவே என்னை ஆஜர் செய்யப்படாமலிருப்பது சட்டவிரோதமென்பதும் எனக்குரிய நீதியை மறுப்பதாகவும் அமைந்தது. மேலும் கொடைக்கானல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக அழைத்துச செல்லப்படும் வேளைகளில் கைவிலங்கு “லீடிங் செயின்” என்பன பூட்டி தொடர்ந்து நாற்பது மணிநேரம் பிரயாணம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டேன். இடையில் ஒய்வெடுக்க அனுமதிக்கப்படுவதில்லை. அதுமட்டுமல்ல உணவு கூட எனக்கு வழங்கப்படுவதில்லை. இவ்வாறு மனிதாபிமானமற்ற முறையிலும், சட்டவிரோதமாகவும் நடத்தப்படுவதை சுட்டிக்காட்டி இது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி கொடைக்கானல் நீதிமன்ற நீதிபதி,

வேலுார் மாவட்ட ஆட்சித் தலைவர், சிறப்பு முகாம் பொறுப்புத் தாசில்தார் ஆகியோருக்கு மனுக்கள் கொடுத்தேன்.ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே வேறுவழியின்றி இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தேன் (HCP 526/93). இம்மனுவில் தொடர்ந்து 40 மணிநேரம் பிரயாணம் செய்து நீதிமன்றம் சென்றுவருவது எனக்கு மிகவும் சிரமமாக இருப்பதால் நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள முகாம் ஒன்றிற்கு என்னை மாற்றும்படி கோரினேன். அத்துடன் அகதி நிலையிலிருக்கும் எனக்கு கைவிலங்கு, “வீடிங் செயின்” போடுவது சட்டவிரோதமென்பதால் இதுகுறித்தும் நடவடிக்கை எடுக்கும்படி கோரினேன். அடிப்படை மனித உரிமைகள் மற்றும் வசதிகள் மறுக்கப்பட்டு சட்டவிரோதமாக மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டுவரும் எனக்கு நீதி வழங்க வேண்டுமென்று கோரியிருந்தேன்.

உயர்நீதிமன்றத்தில் என் இம்மனுமீதான விசாரனை நடைப்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் கொடைக்கானல் நீதிமன்றத்திற்கு நான் ஆஜர்படுத்தப்படாமையினால் அந்நீதிமன்றம் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டதை அடுத்து 12.7.93 அன்று மதுரை மத்திய சிறைக்கு கொண்டு சென்று அடைக்கப்பட்டேன். காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு நபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டியது பொறுப்பான அதிகாரிகளின் கடமையாகும். மாவட்ட ஆட்சித்தலைவர் பொறுப்பில், போலீஸ் காவலில், சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த என்னை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டியதும், அவ்வாறு ஆஜர் செய்யப்படாத வேளைகளில் அதுபற்றிய காரணத்தை நீதிமன்றத்திற்கு தெரிவிக்கவேண்டியதும் இவ்வதிகாரிகளின் பொறுப்பாகும். எனவே நான் ஆஜர் செய்யப்படவில்லையாயின் அது என் தவறு கிடையாது. சம்பந்தப்பட்ட இவ்வதிகாரிகளின் தவறு ஆகும். ஆதலால் நான் ஆஜர் செய்யப்படாத வேளை இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விளக்கம் கேட்பதற்கு மாறாக, நான் சிறப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டிருப்பது நன்கு தெரிந்தும், இதனால் ஆஜர் செய்யப்படாததில் என்மீது எந்தத் தவறுமில்லை என்பது நன்கு புரிந்தும், நியாயத்திற்கு புறம்பாக மதுரை சிறையில் என்னை அடைக்கும்படி கொடைக்கானல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். இது அரசு என்னைப் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு நீதிபதியும் ஒத்துழைப்பதாகவே அமைந்தது. எனவே என் கருத்துக்கள் எதுவும் கேட்காமல், அரசின் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கும் வண்ணம் நீதிபதியினால் மதுரை மத்திய சிறையில் நான் அடைக்கப்பட்டதால் இதனை உயர்நீதிமன்றத்தில் தெரியப்படுத்தினேன். என்மீது எந்தத் தவறுமில்லாத நிலையில் நியாயத்திற்கு புறம்பாக நான் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருப்பதை புரிந்துகொண்ட உயர்நிதிமன்றம் உடனடியாக என்னை துறையூர் சிறப்பு முகாமிற்கு அனுப்பி வைக்கும்படி 24.8.93 அன்று மதுரை மத்திய சிறைக் கண்காணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் அதை மதுரை சிறைக்கண்காணிப்பாளர் அமுல்படுத்தாததால் அதனை இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு தெரியப்படுத்தினேன். இந்நீதிமன்றமும் உயர்நீமன்ற உத்தரவை உடனடியாக நிறைவேற்றும்படி 26.11.93 அன்று உத்தரவிட்டது. இச்செய்தி அனைத்து பத்திரிகைகளிலும்

www.tamilarangam.net

பிரசுரிக்கப்பட்டது. நானும் நீதிமன்ற உத்தரவுப்படி சிறப்பு முகாமிற்கு அனுப்பி வைக்கப்படுவேனென நம்பியிருந்தேன். ஆனால் இந்நீதிமன்ற உத்தரவையும் மதுரை சிறைக் கண்காணிப்பாளர் அமுல்படுத்தவில்லை.

மீண்டும் என்னை மதுரை சிறையில் அடைக்கப்பட்ட வேளை உடல்,உளரீதியாக மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டேன். 12.7.93 முதல் மீண்டும் சிறையில் என்னை அடைத்தபோது LTTE சிறைவாசி எனக்குறிப்பிட்டு தனிமைச்சிறையில் அடைத்தனர். மரணதண்டனை பெற்ற சிறைவாசிகளைக் கூட தனிமைச் சிறையில் அடைக்கக்கூடாது என்றுஉச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ள வேளையில் சாதாரண விசாரனைச் சிறைவாசியான என்னை தனிமைச் சிறையில் அடைத்தது சட்டவிரோதமாகும். அதுமட்டுமல்ல சிறைவாசிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள வசதிகளான பத்திரிகைகள், புத்தகங்கள், வானொலி, டி.வி, சினிமா என்பன எனக்கு மறுக்கப்பட்டன. எவ்வித பொழுதுபோக்கு வசதியும் செய்து தரப்படவில்லை. சக சிறைவாசிகளுடன் பேசுவதற்கு கூட அனுமதிக்கப்படாமல் தனிமைச்சிறையில் அடைக்கப்பட்டேன். LTTE எனக்குறிக்கப்பட்டிருப்பதால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லமுடியாது எனக் காரணம் காட்டி மருத்தவ சிகிச்சை மறுக்கப்பட்டது. இதானல் சுமார் மூன்று மாதங்கள் பல்வலியினால் மிகவும் கஸ்டப்பட்டேன். இவ்வாறு எனக்கு இழைக்கப்படும் சிறைக் கொடுமைகளைக் குறிப்பிட்டும், பல்வலிக்கு மருத்துவ சிகிச்சை கோரியும் சிறைத்துறைத் தலைவர் மற்றும் இம்மன்ற நீதிபதி ஆகியோருக்கு சிறைக் கண்காணிப்பாளர் மூலமாக மனு அனுப்பினேன். ஆனால் இம்மனுக்கள் சிறைக் கண்காணிப்பாளரால் அனுப்பிவைக்கப்படவில்லை என்பதை தெரிந்து கொண்ட நான் 9.3.94 அன்று வாய்தாவின் போது இம்மன்றத்தில் நேரிடையாகவே மனுக்கொடுக்க விரும்பினேன். ஆனால் அப்போதிருந்த நீதிபதி அவர்கள் என் குறைகளைக் கேட்க மறுத்ததுடன் நான் மனுக்கொடுப்பதற்கே அனுமதிக்கவில்லை. அத்துடன் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களுடன் பேசுவதற்கும் என்னை அனுமதிக்கவில்லை. அதுமட்டுமல்ல என் வழக்கறிஞர் பாஸ்கரன் அவர்களுடனும் நான் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. சிறையிலோ அல்லது நீதிமன்றத்திலோ நான் வழக்கறிஞருடனும், குற்றம்சாட்டப்பட்டவர்களுடனும் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாலும், என் குறைகளை மனுவாகக் கொடுப்பதற்கு நீதிபதி அவர்கள் அனுமதி மறுத்தாலும், சிறையில் எனக்கு மருத்துவசிகிச்சை மறுக்கப்பட்டதாலும் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட “பொழிலன்” என்பவர் எனக்கு சட்டரீதியான உரிமைகள் மறுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களுக்கு மனுக் கொடுத்தார். என் வழக்கறிஞர் பாஸ்கரன் அவர்களும் இதுகுறித்து தலைமை நீதிபதிக்குப் புகார் செய்தார். தமிழ்நாடு இளைஞர் பேரவை பொறுப்பாளர் “முகிலன்” அவர்களும் இதுகுறித்து கண்டனப் பிரசுரம் ஒன்று வெளியிட்டார். ஆனால் எவ்விதபயனும் ஏற்படவில்லை. எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்மீதான கொடுமைகள் தொடர்ந்தன.

இவ்வழக்கிற்காக எனக்கு வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் என்னை "தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை" என்னும் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வழக்கில் அரசு தரப்பினரால் கொடுக்கப்பட்டிருக்கும் "அப்ரூவர்" சாட்சி வாக்குமூலத்திலும் என்னை "தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை" இயக்கத்தைச் சேர்ந்தவன் என்றே கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல 7.5.91 அன்று என்னை தேசீய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வைக்கப்பட்ட போதும் அதற்காக அரசு தரப்பினால் கொடுக்கப்பட்ட ஆவணங்களில் என்னை "தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை" என்னும் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்றே கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஆரம்பம் முதல் என்னைத் தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று குறிப்பிட்டு வந்த போலீசார் 12.7.93 அன்று மீண்டும் என்னை மதுரை மத்திய சிறையில் அடைக்கும்போது பழிவாங்கவேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே எவ்வித ஆதாரமுமின்றி என்னை "LTTE" இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று குறிப்பிட்டனர். நீதிமன்றத்தில் தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று தெரிவிக்கும் போலீஸ், என்னைக் கொடுமைப்படுத்துவதற்காகவே நீதிமன்றத்திற்கு வெளியே "LTTE" என குறிப்பிடுகின்றது. இதனாலேயே சிறையில் தனிமையில் அடைக்கப்பட்டேன். இதைக்காரணம் காட்டியே மருத்துவசிகிச்சை மறுக்கப்பட்டது. மேலும் நீதிமன்றத்திற்கு அழைத்துவரும்போது முதலமைச்சருக்கு வழங்கப்படும் பந்தோபஸ்து போல் அதிக போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டு, கைவிலங்கு, "லீடிங்செயின்" என்பன போட்டு அழைத்துவரப்பட்டேன்.மக்கள் மத்தியில் கொடிய பயங்கரவாதி போல் சித்தரிக்கப்பட்டேன். இதனால் உடல்,உளரீதியாகவும் நான் மிகவும் பாதிக்கப்பட்டேன்.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இங்கே சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்று கூறப்படுகின்றது. ஆனால் இவ்வழக்கில் முதலாம் எதிரியிலிருந்து 14-ம் எதிரிவரை அனைவருக்கும் ஜாமீன் வழங்கப்பட்டு சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் 15-ம் எதிரியான எனக்கு மட்டும் "இலங்கைத் தமிழன்" என்ற ஒரே காரணத்திற்காக சிறையிலும், சிறப்பு முகாமிலும் மாறிமாறி அடைக்கப்படுவது என்ன சட்ட நியாயம் என்பது எனக்கு புரியவில்லை. இந்த ஒரு வழக்கிற்காகவே நான் வைக்கப்பட்டிருக்கிறேன். எனவே இந்த வழக்கு முடிக்கப்பட்டால் நான் நாடு திரும்ப வாய்ப்புக் கிடைக்கும் என்று கருதி வழக்கை விரைந்து முடிக்கும்படி கூறினேன். தேவையானால் வழக்கைப் பிரித்து எனக்கு மட்டும் விசாரணையை மேற்கொள்ளும்படி வலியுறுத்தினேன். என் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக எவ்வித விசாரணையும் நடைபெறாமல் வேண்டுமென்றே தாமதப்படுத்தப்பட்டது. என்னைத் தொடர்ந்தும் அடைத்து வைத்து சித்திரவதை செய்யவேண்டுமென்பதற்காகவே இவ்வாறு வழக்கு விசாரணை தாமதப்படுத்தப்படுகின்றதென்பதை நான் புரிந்து கொண்டேன். போலிஸாரின் நடவடிக்கைகளினால் சந்தேகம் கொண்ட நான் "மத்திய, மாநில உளவுப்படைகளினால் ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே என் உயிருக்கு உத்தரவாதமளிக்கும் வண்ணம் என் பாதுகாப்பை

உறுதிப்படுத்தவும், என்னைக் கொலை செய்து விட்டு தப்பி ஓடமுயன்ற போது சுட்டுக் கொல்லப்பட்டார் என்று நாடகமாடுவதற்கு போலீஸ் சதி செய்கின்றது எனவும், எனவே நான் கொலை செய்யப்பட்டால் எனது மரணத்திற்கு மத்திய மாநில அரசுகளும் அதன் உளவுப்படைகளுமே பொறுப்பு" எனவும் கொடைக்கானல் நீதிமன்ற நீதிபதியிடம் மனுக் கொடுத்தேன். எனது மனுவை உயர்நீதிமன்றம் அனுப்பி, உயர்நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு வழி செய்வதாகச் கூறிய அந்நீதிபதி அவர்கள் எனக்கே தெரியாமல் எவ்வித விசாரணையுமின்றி, காவல் துறையின் நிர்ப்பந்தத்தினால் இம்மனுவைத் தள்ளுபடி செய்தார். இவ்வாறு உயிர்பாதுகாப்பு வேண்டி விண்ணப்பித்த என் மனுவை நிராகரித்ததன் மூலம் என் பாதுகாப்பில் அக்கறை கொள்ளவில்லை என்பதோடு, நீதித்துறையும் போலீசாரின் அராஜகங்களுக்கு துணை போகின்றது என்பதையே வெளிப்படுத்தியது.

எனக்கு இழைக்கப்பட்ட இக்கொடுமைகளைக் குறிப்பிட்டு நியாயம் கோரி உயர்நீதிமன்றத்தில் மீண்டும் என் சார்பாக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. (HCP 480/94) அதில் என்னை ஜாமீனில் விடுதலை செய்யவேண்டும் அல்லது நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள அகதி முகாமில் வைக்கப்படவேண்டுமென்றும், நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும் போது "லீடிங் செயின்" போடக்கூடாது என்று உத்தரவிட வேண்மென்றும், LTTE இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று குறிப்பிடுவதை நீக்க வேண்டுமென்றும், நீதிமன்ற உத்தரவுகளை அமுல்படுத்தாத மதுரை சிறைக் கண்காணிப்பாளர் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் தண்டிக்கவேண்டுமென்றும் கோரப்பட்டது. இதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்றம் 27.4.94 அன்று உயர்நீதிமன்றத்தில் என்னை நேரில் ஆஜர் செய்யவேண்டுமென்று உத்தரவிட்டது. அதன்படி 27.4.94 அன்று உயர்நீதிமன்ற நீதிபதி "மிஸ்ரா" அவர்கள் "பெஞ்ச்" முன்னிலையில் நான் ஆஜர் செய்யப்பட்டேன். உயர்நீதிமன்றம் மற்றும் முதன்மை நீதிமன்ற உத்தரவுகளை அமுல்படுத்தாமல் பொறுப்பற்ற முறையில் அதிகாரிகள் நடந்து கொண்டதையும், சட்டவிரோதமாக நான் கொடுமைப்படுத்தப்படுவதையும் தெரிந்து கொண்ட நீதிபதி அவர்கள், உயர்நீதிமன்றம் முன்பு வழங்கிய ஜாமீன் உத்தரவு (CR.OP.8810/92) அமுலுக்கு வரவேண்டுமென்றும், நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாத சிறைக் கண்காணிப்பாளரை "சஸ்பெண்ட்" செய்யவேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்.எனவே தீர்ப்பு தமக்கு சாதகமாக வரப்போவதில்லை என்பதைப் புரிந்துகொண்ட அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்தா கேட்டுக் கொண்டதால் 21.6.94 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென தெரிவிக்கப்பட்டது. அதுவரை சென்னை மத்திய சிறையில் என்னை வைக்கும்படியும் உத்தரவிடப்பட்டது. விசாரணை செய்த நீதிபதிகளே தொடர்ந்து விசாரிக்கவேண்டும் என்ற வழக்கத்திற்கு மாறாக, அரசு தரப்பு வழக்கறிஞரின் விருப்பத்திற்கேற்ப நீதிபதி "குப்தா" அவர்களின் "பெஞ்ச்" க்கு என்மனு விசாரணை மாற்றப்பட்டது. அதனால் 20.6.94 அன்று நீதிபதி "குப்தா" அவர்கள் பெஞ்ச் முன்னிலையில் நான் அஜர் செய்யப்பட்டேன். நீதிபதி "குப்தா" இது நீதிமன்ற அவமதிப்பு வழக்காகக் கருதவேண்டும் எனக்குறிப்பிட்டு இது குறித்துப் பதிலளிப்பதற்கு அரசு செயலரை ஆஜராகும்படி உத்தரவிட்டார். இதன் நிமித்தம் 4.7.94 அன்று உயர்நீதிமன்றத்தில்

ஆஜரான அரசின் செயலர் "பாஸ்கரதாஸ்" நீதிமன்ற உத்தரவுகளை அமுல்படுத்தாமைக்கும், எனக்கு இழைக்கப்பட்ட சட்டவிரோதக் கொடுமைகளுக்கும், நிபந்தனையற்ற மன்னிப்புக் கோரியதுடன் இனி என்னை சட்டரீதியாக நடத்தப்படுமென உறுதியளித்தார்.

உயர்நிதிமன்ற உத்தரவுப்படி 1.7.94 அன்று நான் துறையூர் சிறப்பு முகாமிற்கு கொண்டு வரப்பட்டேன். துறையூர் சிறப்பு முகாமில் என்னைச் சட்டரீதியாக நடத்தப்படுமென அரசு செயலர் உறுதியளித்திருந்தார். ஆனால் அவ்வுறுதி மொழிக்கு மாறாக நான் மேலும் பழிவாங்கப்பட்டேன். சிறையில் வழங்கப்பட்ட கொஞ்ச உரிமைகள் கூட இச்சிறப்பு முகாமில் வழங்கப்படவில்லை. சிறப்பு முகாமென்னும் பேரில் தமிழக அரசினால் நடத்தப்படும் இச்சித்திரவதை முகாமில் நான் மேலும் கொடுமைப்படுத்தப்பட்டேன்.இச்சிறப்புமுகாம்களில்அடைத்துவைக்கப்பட்டுள்ள அகதிகள் கொடுமைப்படுத்தப்படுகின்றனர் என்பது இன்று அனைவருக்கும் தெரிந்ததே. தமிழக அரசினால் நடத்தப்படும் இச்சித்திரவதை முகாம்களில் மிகவும் கொடிய அடக்குமுறை கொண்ட முகாமாக துறையூர் சிறப்பு முகாம் விளங்குகின்றது. மற்ற சிறப்பு முகாம்களில் வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள்கூட இங்கு வழங்கப்படவில்லை. சிறப்பு முகாமில் வைக்கப்படுவது தொடர்பாக எனக்கு வழங்கப்பட்ட உத்தரவில் (அரசானை எண்.எஸ்.ஆர்.3-866-9 95, நாள் 20.12.1993) 1946-ம் ஆண்டு அயல் நாட்டார் சட்டம் 3(2இ) பிரிவில் (மத்திய சட்டம் 31 1946) வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க 1958-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19-ம் நாளிட்டு இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தில் எண் 4 3 56(1) எப்.1-ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் சொல்லப்பட்டவாறு இலங்கை நாட்டைச் சேர்ந்த அயல்நாட்டார் தொடர்ந்து வசிப்பதை முறைப்படுத்தும் பொருட்டு திரு.பாலன் என்ற பாலச்சந்திரன், த பெ சிவப்பிரகாசம் என்பவர் இனி வசிப்பதற்கு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு துறையூரில் அமைக்கப்பெறும் குடிபுகுந்தவர்கள் மற்றும் அகதிகள் முகாமில் வசித்து வரவேண்டுமென தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் இதனால் அதிகாரமுறையில் ஆணையிடுகின்றார் என்று மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சட்டப்படி சிறப்பு முகாம்களில் வைக்கப்படும் அகதிகளுக்குரிய உரிமைகள் தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் (WP 15044/91) உயர்நீதிமன்ற நீதிபதிகள் "அருணாசலம்" மற்றும் "பிரதாப்சிங்" அவர்கள் வழங்கிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது என்னவெனில்,

* சிறப்பு முகாமில் உணவு வழங்குவதற்கும், நிர்வகிப்பதற்கும் பொறுப்பாக ஒரு உதவி தாசில்தார் நியமிக்கப்பட்டுள்ளார்.

*சிறப்பு முகாமில் வைக்கப்படுபவர்களுக்கு அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதேயன்றி மற்றும்படி அனைத்து உரிமைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

*சிறப்பு முகாமில் வைக்கப்பட்டவர்கள் விரும்பினால் குடும்பத்தலைவர்களை வரவழைத்து தங்களுடன் தங்குவதற்கு

அனுமதிக்கப்பட்டுள்ளது. இக்குடும்பத்தவர்களின் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும்.

*சிறப்பு முகாமிற்குள் இருப்பவர்களை சிறையில் சிறைவாசிகளை "லாக்கப்" செய்வதுபோல் (செல்களில் வைத்துப் பூட்டுதல்) லாக்கப் செய்வது கூடாது. முகாமின் எல்லைக்குள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவார்கள்.

*பார்வையாளர்கள் அனைவரும் அனுமதிக்கப்படுவர். எவ்வித நேரக் கட்டுப்பாடுமின்றி விரும்பிய நேரம் பேசுவதற்கும், பொருட்கள் கொடுப்பதற்கும் அனுமதிக்கப்படும்.

*போலீசார் காவலுக்கு மட்டும் அதுவும் சிறப்பு முகாமின் வெளிப்புறத்தில் பாதுகாப்பிற்காக நிறுத்தப்படும். மற்றும்படி தாசில்தார் பொறுப்பில் தான் முகாம் நிர்வகிக்கப்படும்.

*நாடு திரும்பிச் செல்ல விரும்பினால் சொந்தச் செலவிலோ அல்லது அரசு செலவிலோ அனுப்பிவைக்கப்படும்.

தமிழக அரசு கொடுத்த வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே இவ்வாறு தங்கள் தீர்ப்பில் நீதிபதிகள் குறிப்பிட்டனர். மேற்கண்டஉரிமைகள் யாவும் வழங்கப்பட்டு சட்டப்படியே சிறப்பு முகாம்கள் நடத்தப்படுவதாக தமிழக அரசு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது. ஆனால் உண்மையென்னவெனில் உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் அவ்வுரிமைகளில் ஒன்றைக் கூட தமிழக அரசு சிறப்பு முகாம்களில் வழங்கவில்லை. மாறாக தமிழக அரசும் அதன் அதிகாரிகளும் மனிதாபிமானமற்ற முறையில், ஈவிரக்கமின்றி, தமிழ் அகதிகளை சிறப்பு முகாம்களில் அடைத்து சித்திரவதை செய்து வருகின்றது.

என்னை சட்டரீதியாக நடத்தப்படுமென்று அரசு செயலரால் உயர்நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்ட உறுதிமொழிக்கு மாறாக துறையூர் சிறப்பு முகாமில் சட்ட விரோதமாகத்தான் கொடுமைப்படுத்தப்பட்டேன். ஒரு சிறிய "செல்லில்" மொத்தம் ஆறு பேர்களுடன் சேர்த்து அடைக்கப்பட்டேன். அச்சிறிய செல்லில் 24 மணிநேரமும் பூட்டப்பட்ட நிலையிலேயே வைக்கப்பட்டு அதற்குள்ளேயே மலசலம் கழிக்க வேண்டும்: சாப்பிட வேண்டும்: உறங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டேன். எவ்வித பொழுதுபோக்கு வசதியும் அளிக்கப்படவில்லை. பத்திரிகை வழங்கப்படவில்லை. பாய், தலையணை, படுக்கை விரிப்புக்கள் கூட தரப்படவில்லை. இவற்றை நான் என் சொந்தச் செலவில் பெற்றுக் கொள்வதற்கும் அனுமதிக்கப்படவில்லை. என் பணத்தை நான் வைத்திருக்கவும் அனுமதிக்கவில்லை. அதைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் பெற்றுக் கொண்டமைக்கு அத்தாட்சியாக எவ்வித ரசீதும் கொடுக்கவில்லை. சிறையில் கைதிகளுக்கு சத்துள்ள உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், போர்வை, தரைவிரிப்பு, தலையணை, சோப், எண்ணை,

சீயக்காய்த்துாள் என்பன வழங்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல வாரமொரு தடவை இலவசமாக “கார்டு“ வழங்கி உறவினர்களுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுகின்றது. மற்றும் பத்திரிகை, வானொலி, ரீ.வி, சினிமா போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் பகல் தவிர்த்து இரவு 12 மணிநேரம் மட்டுமே “லாக்கப்” செய்யப்படுகின்றது. பார்வையாளர்கள் பார்வையிடுவதற்கும், பொருட்கள் கொடுப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறையில் கைதிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமைகள் மற்றும் வசதிகள் கூட சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் எமக்கு வழங்கப்படவில்லை. இவற்றை எமது சொந்தச் செலவில் கூட பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்காமல் இவ்வாறு சட்ட விரோதமாக கொடுமைப்படுத்தப்படுகிறோம். என்னையும் மற்ற சக அகதிகளையும் செல்களில் அடைத்து பூட்டி வைத்திருப்பதுடன், எமது செல்களுக்கு முன்னாடியே நவீன ஆயுதங்களுடன் போலீசார் காவல் புரிகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பிலே சிறப்பு முகாம் நிர்வகிக்கப்படுவதாக கூறப்பட்டாலும் இம்முகாம்கள் காவல்துறை அதிகாரிகளாலேயே நிர்வகிக்கப்படுகின்றதென்பது உண்மை. உயர் அதிகாரிகள் அடிக்கடி விஜயம் செய்து சிறப்பு முகாமில் உள்ளவர்களின் குறைகளைக் கேட்டு நடவடிக்கை எடுப்பார்கள் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சட்டசபையில் தெரிவித்தார். ஆனால் எமது முகாம் பொறுப்பாளர் எனக் கூறப்படும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் இதுவரை ஒரு முறை கூட முகாமிற்கு வரவில்லை. அது மட்டுமல்ல மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நாம் அனுப்பும் மனுக்களுக்கும் பதில் தருவதுமில்லை: நடவடிக்கை எடுப்பதுமில்லை. இந்நிலையில் இவர்களின் சித்திரவதைகளினால் பாதிக்கப்பட்ட “சிவா” என்பவர் கரூர் நீதிமன்றத்தில் 17.10.94 அன்று இதுபற்றி வாக்குமூலம் கொடுத்தார். அவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்கு மூலத்திலிருந்து சில பகுதிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதிலிருந்து எத்தகைய கொடுமையான முகாமில் நான் வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை தாங்கள் புரிந்து கொள்ள முடியும்.

**“21.12.93 அன்று உதவி ஆய்வாளர் அன்பழகன் தலைமையில் வெறிபிடித்த போலீசார் கும்பலாகச் சேர்ந்து என்னைத் தாக்கினார்கள். இதனால் என் கால் முறிந்தது. அன்று என்னை மட்டுமல்ல முகாமில் வைக்கப்பட்டிருந்த இன்னும் பலரையும் இவ்வாறு அடித்துத் துன்புறுத்தினர். அவர்கள் எவ்வாறு சித்திரவதை செய்தனர் என்பதைக் கூறுவதற்கு என் நாக்கு கூசுகிறது. அந்த அளவிற்கு கேவலமான முறையில் கொடுமை செய்தனர். கால் முறிந்து நடக்க முடியாமல் நான் வேதனைப்பட்ட போதும் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை. எனக்கு மருத்துவ சிகிச்சையும் தரப்படவில்லை. இச்சிறப்பு முகாமில் தாய், தந்தை, பிள்ளைகளை பிரித்து அடைத்து வைத்துள்ளனர். இவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசுவதற்குக் கூட அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வாறு தனியாகப் பிரித்து அடைத்துவைக்கப்பட்டிருக்கும் பெண்களை தமது அதிகாரத்தைக் காட்டி மிரட்டி பாலியல் பலாக்காரத்திற்கு உட்படுத்துகின்றனர். இரவு நேரங்களில் மருத்துவ மனைக்கென அழைத்துச் சென்று வெளியே வைத்து தமது காம இச்சைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறு போலீஸ் அதிகாரிகளினால் பாதிக்கப்பட்ட பெண்கள் உயரதிகாரிகளிடம்**

**நேரடியாக முறையிட்டும் மனுக் கொடுத்தும் இதுவரை இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது அரசு மற்றும் உயர் அதிகாரிகளின் சம்மதத்தோடும் ஆசீர்வாதத்தோடும் நடத்தப்படுகிறதென்றே நான் கருதுகிறேன். அத்துடன் இங்குள்ள சிறுவர்களுக்கு கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களின் எதிர்காலமே பாதிக்கப்படுவதை சுட்டிக்காட்டியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. இந்நிலையில் நோட் புக், பேனா, பாடப்புத்தகங்கள் எவற்றையும் சொந்தச் செலவில் பெற்று படிப்பதற்கும் அனுமதிக்கவில்லை.”** என்று தனது வாக்குமூலத்தில் சிவா தெரிவித்துள்ளார். இதிலிருந்து போலீஸ் பொறுப்பில் இருக்கும் ஒரு முகாமில் என்ன நடக்கும் என்பதை தங்களால் உணர்ந்து கொள்ளமுடியும் என நம்புகிறேன். நீதிமன்றத்தில் ஒருவர் வாக்குமூலமாக இக்கொடுமைகளைத் தெரிவித்த பின்பும் கூட நீதிமன்றமோ அல்லது அரசோ இது குறித்து இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சிறப்பு முகாமில் பார்வையாளர்கள் அனைவரையும் பார்வையிடுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தும், இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் “முகிலன்” என்பவர் என்னைப் பார்வையிட வந்த போது அனுமதிக்கவில்லை. இது தொடர்பாக “முகிலன்” அவர்கள் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரடியாக மனுக் கொடுத்தும் இதுவரை அனுமதி வழங்கவில்லை. எனது வழக்கு ஒருங்கிணைப்பாளர் “கணேசன்” அவர்களும் பார்வையிட வந்தபோது அனுமதிக்கவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் அனைவருக்கும் மனுக்கொடுத்தேன். ஆனால் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில் 21.7.94 அன்று இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கிற்காக ஆஜர் செய்யப்பட்டேன். அப்போதிருந்த நீதிபதி அவர்களிடம்,

“ஜயா, அகதி நிலையில் சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிக்கும் எனக்கு சட்டவிரோதமாக கைவிலங்கு, லீடிங்செயின் போட்டு அழைத்து வந்துள்ளனர். இவ்வாறு போடக்கூடாதென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தும், உயர்நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் வகையில் இவர்கள் செயற்படுவதை நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டும். மேலும் சிறப்பு முகாமில் எவ்வித பொழுதுபோக்குமின்றி 24 மணிநேரமும் செல்லில் பூட்டி வைக்கப்பட்டிருக்கிறேன். வெளியுலகுடன் எவ்வித தொடர்புமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கிறேன். என் கேஸ் காரர்களுடன் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. என் வழக்கறிஞருடன் கலந்தாலோசிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. எனது வழக்கு ஒருங்கிணைப்பாளருடன் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல இவர்களுடன் நான் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் அனுமதிக்கப்படவில்லை. எனவே எனக்குரிய நீதியைப் பெறுவதற்குரிய வாய்ப்புக்கள் யாவும் மறுக்கப்பட்ட நிலையில் நான் வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதைத் தாங்கள் புரிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.” என்றேன்.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தனக்குரிய நீதியை பெறுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது இந்த மன்றத்தின் கடமையாகும். எனவே நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட நிலையில் நான் வைக்கப்பட்டிருக்கிறேன் என்பதை அறிந்து கொண்ட இம்மன்றம் இதுகுறித்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமென்று நம்பினேன். ஆனால் திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவரின் பொறுப்பில் சிறப்பு முகாம் நிர்வாகம் இருப்பதால் அது குறித்து விசாரிக்க இந்த மன்றத்திற்கு அதிகாரமில்லை என்று பதில் தெரிவிக்கப்பட்டதேயொழிய நீதியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் எனக்குப் கிடைக்கச் செய்ய அக்கறை செலுத்தப்படவில்லை. இந்த மன்றத்திற்கு அதிகாரமில்லையெனில் எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்து உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி நியாயம் கிடைக்க வழி செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் இம்மன்றத்தில் எனக்கு நீதி கிடைக்குமென்ற நம்பிக்கையை ஏற்படுத்த இந்த மன்றம் தவறிவிட்டது என்றே நான் கருதுகின்றேன்.

எனக்கும் முகாமில் வைக்கப்பட்டிருந்த சக அகதிகளுக்கும் இழைக்கப்படும் கொடுமைகள் குறித்து, தடுத்து நிறுத்தக் கோரி சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் யாவருக்கும் மனுக்கொடுத்தேன். அதன் பின் எனக்கு கிடைத்த வாய்பைப் பயன்படுத்தி எனக்கு நியாயம் கிடைக்க வழி செய்யுமாறு கோரி இந்த மன்றத்தில் தெரிவித்தேன். எவ்வித பயனும் கிடைக்காதால் வேறுவழியின்றி 25.7.94 முதல் நானும் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சக அகதிகள் அனைவரும் கால வரையறையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டோம். உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி போலீசார் எங்களை மிரட்டினார்கள். காவல் துறை உயர் அதிகாரி ஒருவர் “ மயிராண்டி அடித்துக் கொன்றால் ஏனென்று கேட்பதற்கு ஆளில்லாத அகதி நாய்” என்று என்னையும் என் தாயையும் தரக்குறைவான வார்த்தைகளால் குறிப்பிட்டும் ஏசினார். மகாத்மா காந்தியை தேச பிதா என்று குறிப்பிடும் ஒரு நாட்டில் நாம் எமது கோரிக்கைகளை அறவழியில், அகிம்சை வழியில் வலியுறுத்திய போது அரசு அதிகாரி ஒருவர் இவ்வாறு தரக்குறைவாக கெட்டவார்த்தைகளால் ஏசியும், மிரட்டியும் நடந்து கொண்டது எத்தகைய சூழ்நிலையில் நாங்கள் வைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் அரசு அதிகாரிகளினால் எப்படி நடத்தப்படுகிறோம் என்பதையும் தங்களால் நன்கு புரிந்து கொள்ள முடியுமென நம்புகிறேன். நாம் இவ்வாறு கொடுமைப்படுத்தப்படுவதையும் அதை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதையும அறிந்த பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராம்தாஸ் அவர்கள் அரசைக் கண்டித்தும் உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்றி உண்ணாவிரதத்தை முடித்து வைக்கும்படியும் கேட்டுக் கொண்டார். தமிழ் நாடு இளைஞர் பேரவை பொறுப்பாளர் முகிலன் அவர்கள் இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்கக்கோரி தலைமை நீதிபதி, தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், தேசிய மனித உரிமைக் கமிஷன் ஆகியோருக்கு தந்தி கொடுத்தார். அத்துடன் பத்திரிகைகள் மூலம் மக்களுக்கு, வெளியுலகத்திற்கு இச்சித்திரவதைக் கொடுமைகளை வெளிப்படுத்தினார். “மக்கள் உரிமைக்கழகம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்”என்பன எமக்கு இழைக்கப்பட்ட

கொடுமைகளை கண்டித்தன. அகதியாக வந்தவர்களை சிறப்பு முகாமில் அடைத்து சித்திரவதை செய்யும் அரசின் சுயரூபத்தை அம்பலப்படுத்தினர். 14 நாட்கள் தொடர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்டோம். இறுதியாக சில உரிமைகள் தருவதற்கு அரசு உறுதியளித்ததால் 14-ம் நாள் தாசில்தார் முன்னிலையில் எமது உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டோம். ஆனால் கொடுத்த உறுதி மொழியை காப்பாற்றாமல் வழக்கம்போல் அரசு எம்மை ஏமாற்றிவிட்டது. இந்நிலையில் எனக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் குறிப்பிட்டும், நேரில் வந்து பார்வையிட்டு இவற்றைத் தெரிந்து கொள்ளும்படி கோரி “தேசீய மனித உரிமைக்கமிஷன்”, “உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி” ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பினேன். அது மட்டுமல்ல அமெரிக்கத் தூதுவர், பிரிட்டன் தூதுவர், ஆஸ்ரேலியத் தூதுவர், ஜெர்மன் தூதுவர், பிரான்ஸ் தூதுவர், நோர்வே தூதுவர், டென்மார்க் தூதுவர், சுவிட்சர்லாந்துத் தூதுவர், ஜப்பான் தூதுவர், இலங்கைத் தூதுவர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தி எனக்கு நியாயம் கிடைக்க உதவி செய்யுமாறு கோரினேன். ஆனால் இதுவரை எவ்வித பயனும் கிடைக்கவில்லை. மாறாக கொடுமைகள், சித்திரவதைகள், பழிவாங்கல் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இந்திய மண்ணில் அதுவும் தமிழ் நாட்டு மண்ணில் எனக்கும், ஈழத்தமிழ் அகதிகளுக்கும் அரசினால் இழைக்கப்படும் இக் கொடுமைகள் “நாஜி” சித்திரவதை முகாம்களையே மீண்டும் நினைவூட்டுகின்றன. இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்றும், இங்கே சட்டப்படியான ஆட்சி நடத்தப்படுகிறதென்றும் கூறிக் கொள்ளும் அரசு இவ்வாறு ஜனநாயக விரோத அராஜகங்கள் மூலம் தன்னைத் தானே அம்பலப்படுத்திக் கொள்கின்றது. அகதியாக வந்தவர்களை சிறப்பு முகாமில் அடைத்து சித்திரவதை செய்யும் இவ்வரசு “ருவாண்டா” அகதி முகாம்களில் நடைபெற்ற படுகொலைகளைக் கண்டிப்பதற்கும், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் “பர்மா” நாட்டு எதிர்கட்சித் தலைவரை விடுதலை செய்யச் சொல்லி குரல் கொடுப்பதற்கும், சர்வதேச ரீதியில் ஜனநாயகத்திற்காக பாடுபடுவதாகக் கூறிக் கொள்வதற்கும் தகுதியற்றது. தன் சொந்த மக்களையே கொன்று குவிக்கும் அரசு, காவல் நிலையத்திலேயே பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் அரசு, கோடி கோடியாக ஊழல் செய்யும் அரசு, அகதியாக வந்தவர்களை சட்ட ரீதியாக மனிதாபிமானத்துடன் நடத்தும் என்று எதிர்பார்ப்பது முட்டாள் தனமாகவே இருக்கும். எனக்கும் சக அகதிகளுக்கும் இழைக்கப்படும் கொடுமைகள் யாவும் அரசுக்குத் தெரிந்ததே அரசு உத்தரவுப்படியே அதிகாரிகளினால் நடத்தப்படுகிறது. இவ்வளவு திமிராகவும், பொறுப்பற்ற முறையிலும், சட்ட விரோதமாகவும் இவ்வதிகாரிகள் நடந்து கொள்வதற்கு அரசே பொறுப்பாகும். எனவே இவ்வராஜகங்களுக்கு இன்று இல்லாவிடிலும் என்றாவது ஒரு நாள் இவ் அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும். அராஜகக் கொடுமைகளுக்கு வரலாற்றில் என்ன முடிவு ஏற்பட்டதோ அதே முடிவு இவ்வராஜக அரசுக்கும் ஏற்படும். இந்த முடிவு மிக விரைவில் நிச்சயம் ஏற்படும். மக்கள் இவர்களுக்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

இதுவரை மூன்று நீதிபதிகள் மாறிவிட்டனர். ஆனால் என்மீது போடப்பட்ட இந்த வழக்கு விசாரணை இன்னும் முடியவில்லை. என்னைக் கைது செய்து ஐந்து வருடங்களாக சிறையிலும் சிறப்பு முகாமிலும் மாறிமாறி அடைக்கப்பட்டு தொடர்ந்தும் கொடுமைப்படுத்தப்படுகிறேன். விசாரணை என்னும் பேரில் வேண்டுமென்றே இழுத்தடிக்கின்றனர். இத்தனைக்கும் நான் செய்த குற்றம் என்ன? அப்பாவி மக்களை கண் மூடித்தனமாக சுட்டுக் கொன்றேனா. அல்லது கன்னிப்பெண்களை பாலியல் பலாத்காரம் புரிந்தேனா? அல்லது பொது மக்கள் மீது வெடிகுண்டு வீசிகொன்று குவித்தேனா? அல்லது மக்களின் உடமைகளை சேதப்படுத்தி கொள்ளையடித்தேனா? அல்லது லஞ்சம் வாங்கினேனா? ஊழல் செய்தேனா? இதில் ஒன்றையேனும் நான் செய்தேனென்று இந்த அரசாலோ அல்லது அதன் காவல் துறை அதிகாரிகளினலோ கூறமுடியுமா? இதையெல்லாம் அன்றாடம் செய்துவரும் இவர்கள் என்மீது பொய்வழக்குப் போட்டு விசாரணையென்னும் பேரில் நாடகம் ஆடுகின்றனர். என்னைப் பொறுத்தவரையில், உலகிலுள்ள அனைத்துப் பிரச்சனைகளுக்கும் காரணமான முரண்பாடுகளை ஒழிக்க புரட்சி அவசியம் என்று கருதினேன். இது குற்றமா? என் நாட்டில் இனப்பிரச்சனைக்குத தீர்வாக தமிழ் சிங்கள உழைக்கும் மக்களின் ஐக்கியத்தின் மூலம் ஒரு புதிய ஜனநாயகப் புரட்சி மலர வேண்டுமென்று விரும்பினேன். இது குற்றமா? புரட்சிக்காக உழைப்பதே ஒவ்வொரு மனிதனதும் வரலாற்றுக் கடமை என்பதை உணர்ந்து, புரட்சிக்காக என் வாழ்க்கையை அர்ப்பணிக்க விரும்பினேன். இது குற்றமா? உலகிலுள்ள ஒவவொரு மனிதனும் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். இம்மனிதன் மீதான அடக்குமுறைகள் யாவும் உடைத்தெறியப்படவேண்டும். ஒருவரை ஒருவர் சுரண்டும் அமைப்பை ஒழிக்கவேண்டும். ஏற்றத்தாழ்வுகள் நீங்கவேண்டும். சமத்துவம் ஏற்படவேண்டும். இவையனைத்தையும் நிறைவேற்றும் புரட்சி நிகழவேண்டும் என்று விரும்பினேன். அதற்காக உண்மையாக உழைத்தேன். இதனாலே தான் நான் கைது செய்யப்பட்டேன். சிறையிலும் சிறப்பு முகாமிலும் மாறிமாறி அடைக்கப்பட்டேன். தொடர்ந்தும் மிகக் கொடுமையான சித்திரவதையை அனுபவிக்கிறேன். இதையிட்டு நான் கவலை கொள்ளவில்லை. ஏனெனில் மனிதகுல முன்னேற்றத்திற்கு உதவவேண்டும் என்ற விருப்பத்தில் பாடுபட்டவர்களை மக்களின் எதிரிகள் மிருகங்களைப் போல் வேட்டையாடி சிறையில் தள்ளி சித்திரவதை செய்திருக்கின்றார்கள். எனவே எனக்கும் இவ்வரசால் இவ்வாறான கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டது குறித்து நான் கலங்கவில்லை. நான் புரட்சியை நேசிக்கிறேன். அப்புரட்சிக்காக உழைப்பது என் வரலாற்றுக் கடமையாக எண்ணுகிறேன். இதனால் நான் இன்று சிறைவாழ்வை அனுபவிக்கிறேன், இருப்பினும் என்றாவது ஒருநாள் இச்சித்திரவதை முகாமிலிருந்து நான் விடுதலை செய்யப்படலாம். அப்போது மீண்டும் நான் புரட்சிப்பணியைத் தொடர்வேன். இதனால் மீண்டும் இவ்வரசினாலோ அல்லது இலங்கை அரசினாலோ அல்லது ஏதாவது ஒரு பிற்போக்கு அரசினாலோ நான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படலாம். இவ்வாறு ஒருமுறை, இருமுறை அல்லது பலமுறை நிகழலாம். அப்போது இவ்வரசுகள் என்னை படுகொலையும் செய்யக்கூடும். இதையிட்டு நான் சிறிதும் கவலைப்படவில்லை. நான் இக்கஷ்டவாழ்க்கையை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்கிறேன். என்னைச் சிறையிலோ அல்லது சிறப்பு

முகாமிலோ அடைத்து வைத்து கொடுமைபடுத்துவதன் மூலமோ அல்லது என்னைச் சுட்டுக் கொல்வதன் மூலமோ எனது இலட்சியத்தை தடுத்துவிட முடியுமென்று கனவு காண்கின்றனர். ஆனால் இவர்கள் காணும் இக்கனவு ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை. ஏனெனில் என்னைப் போல் இன்னும் எத்தனையோ பேர் நாளுக்கு நாள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் அந்திமதினம் வரையிலும் சுதந்திரத்திற்காகவும், விடுதலைக்காகவும் போராடிக் கொண்டே இருப்பார்கள். இதே காரியம் உலகமெங்கிலும் சகல நகரங்களிலும், சகல ஊர்களிலும் ஒரே ரீதியில் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு முடிவுமில்லை: அளவுமில்லை. நாளுக்கு நாள் இந்த இயக்கம் வளர்கிறது. என்னைப் போன்ற அனைத்து மக்களுக்கும் வெற்றிகிட்டுகின்ற நிமிடம் வரையிலும் இது வளர்ந்து கொண்டே தான் இருக்கும்.

படிக்கமுடியவில்லை, படித்தால் வேலை கிடைப்பதில்லை, வேலை கிடைத்தாலும் வாழ்க்கைக்கு போதிய சம்பளம் வழங்கப்படுவதில்லை. இவையெல்லாவற்றையும் ஒரளவு சமாளித்தாலும் கூட எல்லாவற்றிற்கும் மேலாக எமது உயிருக்கு உத்தரவாதமில்லை. தமிழனென்ற ஒரே காரணத்திற்காக, சிங்கள இனவெறி இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படுகின்றோம். அப்பாவி இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிதிதிரவதை செய்யப்படுகின்றனர். கன்னிப்பெண்கள் வெறிபிடித்த இராணுவத்தால் கற்பழிக்கப்படுகின்றனர். குண்டுவீசி மக்கள் கொல்லப்படுகின்றனர். இதனால் தமிழ் மக்கள் அகதிகளாக உலகம் முழுவதும் அலைகின்றனர். இதுதான் இலங்கையில் தமிழ் மக்களின் நிலை. எனவே இந்நிலையில் தமிழனான நான் இதையெல்லாம் தாண்டி எப்படி அமைதியாக வாழமுடியும்? எனவே தான் எனது அமைதியான நல்வாழ்விற்காக அதைப் பெற்றுக் கொடுக்கும் புரட்சிக்காக எனது பங்களிப்பைச செலுத்த வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. சிங்கள இனவெறி அரசு ஆயிரக்கணக்கில் தமிழ் மக்களை ஈவிரக்கமற்று, வேதனையற்று இன்னும் சொல்லப் போனால் பரிபூரண திருப்தியோடு கொன்று குவிக்கிறது. அவ்வினவெறி அரசு இவ்வாறு தமிழ் மக்களைக் கசக்கிப் பிழிந்து உயிர்களைப் பருகுவதற்குரிய ஓரே காரணம் என்ன தெரியுமா? தமிழ் மக்கள் மீது அவர்கள் செலுத்தும் அதிகாரத்தை, ஆட்சியை, ஒடுக்குமுறையை நிலைக்கவைக்கும் சகலசட்ட திட்டங்களையும் பாதுகாத்து போற்றி வளர்ப்பதற்காகவே தான். தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதும், தமிழ் மக்களின் இதயங்களைக் சின்னா பின்னப்படுத்துவதுமான காரியத்தை அவர்கள் செய்வது சிங்கள இனத்தையோ அல்லது தங்கள் உயிரையோ பாதுகாப்பதற்கானதற்காப்பு முயற்சியல்ல, தங்கள் உடமைகளையும், சொத்துக்களையும் பாதுகாத்து முதலாள்த்துவ நலன்களை காப்பதற்காகவே இப்படிப்பட்ட கோரக் கொலைகளில் ஈடுபடுகின்றனர். படைப்பலத்தையும், கொலையாளிகளையும், சிறைக்கூடங்களையும் வைத்திருக்க, தங்களது சுகபோகத்தையும், முதலாளித்துவத்தின் நலன்களையும் பாதுகாக்கும், சகல விதமான கொலைச் சாதனங்களையும் வைத்துக் கொண்டிருக்க இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? ஆனால் இவர்களின் இக்கொடுமைகளுக்கெதிராக எம்மைத் தற்காத்துக் கொள்ள வேறுவழியின்றி, நாம் போராடினால் உடனே எமக்குப் பயங்கரவாதி என்று பட்டம் சூட்டுகின்றனர்.

என்மீது குற்றம் சுமத்திய அதிகாரிகள் மீதோ அல்லது என்னைக் கொடுமைப்படுத்திய அதிகாரிகள் மீதோ எனக்கு எந்தக் கோபமுமில்லை. அவர்களை மன்னிக்கும் மனப்பான்மை தொடர்ந்தும் எனக்கு இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். பட்டம், பதவி, பதக்கம் என்பவற்றிற்காக இனவுணர்விழந்து காட்டிக் கொடுக்கும் கருங்காலிகள் போல் இனத்துரோகிகள் போல இவர்கள் செயல்பட்டாலும், இவர்களும் தமிழர்கள் தான். நாம் நடத்தும் போராட்டம் இவர்களுக்கும் மற்றும் இவர்களின் மனைவி பிள்ளைகள் அனைவருக்கும் சேர்த்துத்தான் என்ற உண்மையை இன்று இவர்கள் உணர மறுத்தாலும் காலம் இவர்களுக்கு இதை நிச்சயம் உணர்த்தும். நான் யாரையும் கொலை செய்யவில்லை: எதையும் திருடவில்லை: ஒருவரையொருவர் திருடவும், கொலை செய்யவும், தூண்டிவிடும் இந்த வாழ்க்கை அமைப்பைத்தான் நான் எதிர்க்கிறேன். நான் எதை எதிர்க்கின்றேனோ அதைக் காட்டிக் காப்பவர்கள் என்னை விசாரிக்கின்றார்கள். அவர்களே எனக்கு நீதியையும் வழங்கப் போகிறார்கள். எனவே இவர்களிடமிருந்து உண்மையான நீதி கிடைக்குமென்று எப்படி நான் எதிர்பார்க்க முடியும்? ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுவிட்ட தீர்ப்புக்காக விசாரனை என்னும் பேரில் நடத்தப்படும் நாடகத்தை வேண்டா வெறுப்புடன் அனுபவித்து வருகிறேன். இந்த வழக்கின் இறுதியில் வழக்கம் போல் போலீசாரினால் வெடிக்குண்டுப்புரளி ஏற்படுத்தப்படும். அதனால் நீதிமன்றம் இயங்காமல் நிறுத்தப்படும். இது பத்திரிகைகளில் பரபரப்புச் செய்திகளாக பிரசுரம் செய்யப்படும். இவ்வாறு தாங்கள் விரும்பும் தீர்ப்பை வழங்கவேண்டிய ஒரு நிர்பந்த சூழ்நிலையை உருவாக்குவார்கள். இதற்கு நீங்கள் ஒத்துழைக்க மறுத்தால் உங்கள் மீதோ அல்லது உங்கள் உறவினர் மீதோ “கஞ்சா” கேஸ் போடப்படும் அல்லது வேறு ஏதும் வழியில் பழிவாங்குவதாக மிரட்டுவார்கள். நீங்கள் அவர்களின் விருப்பத்திற்கு ஒத்துழைத்தால் உங்களுக்கு “சூட்கேஸ்” நிறையப் பணம் கொடுப்பார்கள். இது தான் இன்றைய தமிழக நிலை. இது அனைவருக்கும் தெரிந்ததே. எனவே இந்நிலையில் இந்த மன்றத்தில் எனக்கு நீதி கிடைக்குமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்? ஒரு போதும் கிடைக்காது என்பது தெளிவாகப் புரிந்துள்ளது. என்னைப் பொறுத்தவரையில் மக்களே உண்மையான நீதிபதிகள்: மிகப் பெரிய நீதிபதிகள் அவர்களே. ஒடுக்கப்பட்டிருக்கும் இம்மக்கள் விடுதலை பெறும்போது அன்று மக்கள் மன்றத்தில் இவ்வழக்கு மீண்டும் விசாரனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அப்போது தமிழக மக்கள் எனக்குரிய நீதியை நிச்சயம் வழங்குவார்கள். என்னை விடுதலை செய்வார்கள். இது நடக்குமென்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆம்! வரலாறு என்னை விடுதலை செய்யும்.

புரட்சி வெல்க!

இப்படிக்கு
உண்மையுள்ள
சி.பாலச்சந்திரன்

குறிப்பு :

இவ் வாக்குமூலம் 30.8.1995யன்று திண்டுக்கல் முதன்மை நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் பாலச்சந்திரனால் தெரிவிக்கப்பட்டது.இந்நிலையில் 11.12.1995யன்று மதுரை மேலூர் சிறப்பு முகாமுக்கு பாலச்சந்திரன் மாற்றப்பட்டார்.17.2.1997யன்று இவர்மீதான வழக்கு விசாரணை முடிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.பாலச்சந்திரன் நிரபராதி என குறிப்பிட்டு நீதிமன்றம் விடுதலை செய்தும் தொடர்ந்தும் மேலூர் சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டார்.மனுக்கள் உண்ணாவிரதம் என்பன மூலம் தன்னை விடுதலை செய்யுமாறு பாலன் வலியுறுத்தினார்.மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்கள் தமிழ் இனஉணர்வாளர்கள் பத்திரிகைகள் தொடர்ந்து வலியுறுத்தியதன் பயனாய் 30.4.1998யன்று விமானம் மூலம் பாலன் இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்டார்.